(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **236**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 சனவரி 24, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய**, சபாநாயகர்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர**, கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம**, விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க**, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்**, கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,** அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியசேன கமகே,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

---

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்—

(i) 2014 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XV மற்றும் XVI ஆம் பகுதிகளையும்;

(ii) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் IV மற்றும் XXV ஆம் பகுதியையும் ஐந்தாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் ஆறாவது தொகுதியின் XIII மற்றும் XIV ஆம் பகுதிகளையும்; மற்றும்

(iii) 2016 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் IV மற்றும் V ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை; மற்றும்

(iii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான கம்பஹா மாவட்டச் செயலகத்தின் செயலாற்றுகை மற்றும் கணக்குகள் .அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான லங்கா லேலன்ட் (தனியார்) லிமிடட்டின் நிதி அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைகள் கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை அச்சக நிறுவகத்தின் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. மனுக்கள் :**

(i) திஸ்ஸமஹாராம, லுகஸ்கொட, இல. 197 இல் வதியும் திரு. ஏ.கே.பி. மஹிந்தவினது 2017.11.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாத்தறை, நாவிமன தெற்கு, ஹுங்கன்கொட, “சமனல பியஸ” எனும் முகவரியில் வதியும் திரு. ஆதித்ய பண்டாரவினது 2017.11.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மாத்தறை, கோட்டை, யானைக் கால் நோய்த் தடுப்புப் பிரிவில் பணிபுரியும் திரு. டி.எச். குணவர்தனவினது 2017.09.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) ஹக்மன, தெனகம, தெனகம மேற்கு, “சத்துர” எனும் முகவரியில் வதியும் திரு. ஜே.ஜீ. குணபாலவினது 2017.11.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) காலி, மாம்பிட்டிய, ஜய மாவத்தையில் வதியும் திரு. கே.எம்.ஜி.ரீ.ஆர். வைத்தியரத்னவினது 2017.10.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) திக்வெல்ல, சென்டிஸ் வீதியில் வதியும் திரு. எம்.எம்.எம். இன்சாபினது 2017.11.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) பிட்டபெத்தர, தென்னஹேன, “லஹிரு” எனும் முகவரியில் வதியும் திரு. பி.வி. சந்திரசிரியினது 2017.11.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii) இப்பாகமுவ, பக்மீகொல்ல, இல. 413/2 இல் வதியும் திரு. பி.ஜே. திசாநாயக்கவினது 2017.10.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ix) வெலிகம, சமரவீர வீதி, இல. 5/8 இல் வதியும் திருமதி பத்மினி நந்தசிரியினது 2017.11.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(x) பாதுக்க, வேரகல, டேல் எஸ்டேட், இல. 142/7/43 ஏ யில் வதியும் திரு. எஸ்.பி. அமரதாசவினது 2017.11.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xi) தெனியாய, பட்டதுர, இல. 49 இல் வதியும் திரு. சரத் வீரவர்தன திசாநாயக்கவினது 2017.10.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xii) அகுரஸ்ஸ, மாரம்ப, கல்ஹேன, பாடசாலை வீதியில் வதியும் திரு. டப்ளியூ.வீ. திமுது சமீரவினது 2017.10.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xiii)மாத்தறை, தெல்கட வீதி, இல. 45/1 இல் வதியும் திருமதி வை.பீ. மாக்கிரட்டினது 2017.11.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. பாராளுமன்ற அமர்வு (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2018 பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி, திங்கட்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக. அத்துடன், அன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற அமர்வு (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2018 பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி, திங்கட்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம்** : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் பிரேரித்தார்.

(பி.ப. 2.34 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என கௌரவ ஶ்ரீதரன், கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அனுவதிக்க பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.46 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதற்கிணங்க இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 தொடக்கம் 3 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

4 ஆம் வாசகம்:

2 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"வள்ளம் அல்லது வேறு பொருள் அல்லது கைவிடப்பட்ட ஏதேனும்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"அத்தகைய கட்டளையை அவர் இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்:

4 ஆம் பக்கத்தில் 3 முதல் 5 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"தின்கீழ் கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்படும் போதெல்லாம்; அத்து";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 9 முதல் 11 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது அதிலுள்ள ஆள் எவரேனுமிருப்பின் அவருக்கு";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 22 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 30 முதல் 32 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "இச்சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்படின் அவ்வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 1 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "வாடகைக்கமர்த்துநர் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரேனுமிருப்பின் அவர்,";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்:

5 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "கமர்த்துநர் அல்லது அதிலுள்ள எவரேனுமாள் அல்லது அத்தகைய வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 31, 32 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "மொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்:
>
> ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது அதிலுள்ள எவரேனுமாள் அல்லது அத்தகைய வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள் இப்பிரிவின்கீழ் முதற்றடவையாகத் தவறொன்றைப் புரியுமிடத்து, அத்தகைய ஒவ்வோராளும், விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இதற்கான அட்டவணை I இன் நிரை I இலுள்ள நேரொத்த

> பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை I இன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.'';

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்:

6 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> ''எவரேனுமாள் அல்லது அத்தகைய வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்'';

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 22 ஆம், 23 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> ''குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்:
>
> ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது அதிலுள்ள எவரேனுமாள் அல்லது அத்தகைய வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள் இப்பிரிவின்கீழ் முதற்றடவையாகத் தவறொன்றைப் புரியுமிடத்து, அத்தகைய ஒவ்வோராளும், விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இதற்கான அட்டவணை II இன் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை II இன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.'';

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> ''அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனுமாள் அல்லது அத்தகைய வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள்'';

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"அல்லது அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனுமாள் அல்லது அத்தகைய வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் 27 ஆம், 28 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"அதனைப் புரிவதில் அல்லது ஆயத்தஞ்செய்வதில் ஏதேனும் செயலைச் செய்கின்றவருமான";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"பிரிவுகள் 15, 15அ மற்றும் 15ஈ";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"எவரேனுமாள் அல்லது வள்ளத்தில் இருந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனுமாள், ஒரு தவறானது தாம் அறியாமல்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7ஆம் 8 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 1 முதல் 10 வரையான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"முதன்மைச் சட்ட வாக்கத்தின் 17அ மற்றும் 17ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 17அ மற்றும் 1 7ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"எல்லாத் தவறுகளும் பிடியாணை யின்றிக் கைதுசெய்ய த்தக்கனவா கவும் பிணையில் விடுபடற்பா லனவல்லாத னவாகவும் இருத்தல்.

17அ. இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இச்சட்டத்தின் கீழ் புரியப்பட்ட எல்லாத் தவறுகளும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட, பிடியாணையின்றிக் கைது செய்யத்தக்கனவாகவும் பிணையில் விடுபடற்பாலனவல்லாதனவாகவும் இருத்தல் வேண்டும்.

(22 ஆம் அத்தியாய மான) குற்றச் செயல்களை த் தடுத்தற் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை

17ஆ. (22 ஆம் அத்தியாயமான) குற்றச் செயல்களைத் தடுத்தற் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை அடையாளங் காண்பதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். ".

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 முதல் 12 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

13 ஆம் வாசகம்

13 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"அத்தகைய தவறை இணக்குதல் தோதானதாக";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"அவரின்மீது பணத்தொகையொன்று ஏன் விதிக்கப்பட";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் பக்கத்தில் 23 முதல் 25 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"தின்கீழ் விதிக்கப்படக்கூடியதுமான குறைந்தபட்சத் தண்டத்தின் ஐந்திலொன்றுக்குக் குறையாத பணத்தொகையொன்றை அவ்வாளின் மீது விதித்தல் வேண்டும். மேலும், வள்ளம், மீன் அல்லது வேறு பொருளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் கூட்டுமொத்தத்தை விஞ்சாத பணத்தொகையொன்றும் வள்ளத்தைத் தடுத்துவைப்பதிலும் அதன் கப்பற்றொகுதியினரைத் திருப்பியனுப்புவதிலும் உறப்பட்ட செலவுதொகைகளும் இப்பிரிவின் கீழான தீர்த்துவைத்தலின் பாகமாகச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், எந்த மீன்பிடி வள்ளம், மீன் அல்லது வேறு பொருள் தொடர்பிலான தடுப்புக்கட்டளையெதுவும் நீதிவானினால் ஆக்கப்பட்டிருக்கவில்லையோ அத்தகைய மீன்பிடி வள்ளத்தை, மீனை அல்லது வேறு பொருளை விடுதலை செய்யும்படி பணிப்பாளர் தலைமையதிபதி கட்டளையிடுதலும் வேண்டும்.".

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"தவறை இணக்குவதற்கெதிராகக் காட்டுவதற்குத்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"விற் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையொன்றை அவ்வாளின்மீது விதிக்கலாம்";

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் 8 முதல் 13 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> “(5) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி எவரேனுமாளின்மீது விதிக்குமிடத்து, அத்தகைய விதிப்பனவு பற்றிய விபரங்களைச் சுட்டிக்காட்டி அத்தகைய ஆளுக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுவதனை அவர் செய்வித்தல் வேண்டும்.”;

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 தொடக்கம் 20 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

21 ஆம் வாசகம்

20 ஆம் பக்கத்தில் 19 முதல் 21 வரையான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> “என்பது, ஒரு வள்ளத்தில் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் இல்லாத அவ்வள்ளத்தையும் உள்ளடக்கும்;”;
>
> “அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்”, என்பது கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் பரிசோதகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் அலுவர், சிற்றலுவலர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள கடற்படையின் எவரேனும் உறுப்பிர், சார்சண்டு என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள வான்படையின் எவரேனும் உறுப்பினர், சார்சண்டு என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், கரையோரக் காவல் திணைக்களத்தின் கிரமமான சேவையைச் சேர்ந்த எவரேனுமாள் மற்றும் பெயரினால் அல்லது பதவியினால் அமைச்சரினால் எழுத்தில் அத்தகையவராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறெவரேனுமாள் என்று பொருளாகும்;”.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதலாம் அட்டவணை

24 ஆம் பக்கத்தில் அட்டவணை I ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

**அட்டவணை I**

(பிரிவு 15)

| **நிரை I** | **நிரை II** |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்)** |
| | **ஆள்புல நீர்ப்பரப்புகள்** |
| 15 க்குக் குறைவாக | 6 |
| 15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும் | 20 |
| 24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும் | 100 |
| 45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும் | 150 |
| 75 க்கு மேற்பட | 175 |
| நிருவாக ரீதியிலான தண்டம் | ஏற்புடையதல்ல |

அட்டவணை I திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் அட்டவணை II ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

**அட்டவணை II** (பிரிவு 15அ)

| **நிரை I** | **நிரை II** |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்)** |
| | **ஆள்புல நீர்ப்பரப்புகள்** |
| 15 க்குக் குறைவாக | 4 |
| 15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும் | 15 |
| 24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும் | 75 |
| 45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும் | 120 |
| 75 க்கு மேற்பட | 150 |
| நிருவாக ரீதியிலான தண்டம் | ஏற்புடையதல்ல |

அட்டவணை II திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

25 ஆம் பக்கத்தில் அட்டவணை III ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

**அட்டவணை III** (பிரிவு 15ஆ)

| **நிரை I** | **நிரை II** |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்)** |
| | **புபொ வலயத்தினுள்** |
| 15 க்குக் குறைவாக | 10 |
| 15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும் | 30 |
| 24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும் | 120 |
| 45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும் | 180 |
| 75 க்கு மேற்பட | 220 |
| நிருவாக ரீதியிலான தண்டம் | தொடக்கக் குற்றப்பணத்தின் 1/5 |

அட்டவணை III திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

26 ஆம் பக்கத்தில் அட்டவணை IV ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

**அட்டவணை IV** (பிரிவு 15இ)

| **நிரை I** | **நிரை II** |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்)** |
| | **புபொ வலயத்தினுள்** |
| 15 க்குக் குறைவாக | 5 |
| 15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும் | 20 |
| 24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும் | 80 |
| 45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும் | 130 |
| 75 க்கு மேற்பட | 160 |
| நிருவாக ரீதியிலான தண்டம் | தொடக்கக் குற்றப்பணத்தின் 1/5 |

அட்டவணை IV திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

26 ஆம் பக்கத்தில் அட்டவணை V ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

**அட்டவணை V** (பிரிவு 17)

| **நிரை I** | **நிரை II** |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்)** |
| | **புபொ வலயத்தினுள்** |
| 15 க்குக் குறைவாக | 100,000 |
| 15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும் | 200,000 |
| 24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும் | 500,000 |
| 45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும் | 1,500,000 |
| 75 க்கு மேற்பட | 7,500,000 |

அட்டவணை V திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் பகுதியாக இருக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அட்டவணைகள் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்**

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிக்கையிடப்பட்டது.

“திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**6. ஒத்திவைப்பு (“ஆயிரம் பாலங்கள் திட்டம்” இன் கீழ் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படும் பாலங்கள்)**: “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 4.52 மணிக்கு, இன்றைய தின சபைத்தீர்மானத்திற்கு ஏற்ப, 2018 பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.